# சேகுவேராவைப் போல இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம் துணை முதல்வர்!

## பேரவையில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவிப்புகள்... 3-ஆம் பக்கத் தொடர்ச்சி

திருப்பணி பெரிது; முத்தமிழ் முருகன் மாநாடு பெரிது; 2,820 கோயில்களுக்கு குடமுழுக்கு பெரிது; (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கால பூஜை திட்டம் பெரிது; காசி இராமஸ்வேரம் ஆன்மீக பயணம் பெரிது; (மேசையைத் தட்டும் ஒலி) பெருந்திட்ட வரைவு திருப்பணி பெரிது; தங்க முதலீட்டு திட்டம் பெரிது; திருத்தேர் திருப்பணி பெரிது; பெண் ஓதுவார் நியமனம் பெரிது; (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் பெரிது; (மேசையைத் தட்டும் ஒலி) நாள் முழுவதும் அன்னதான திட்டம் பெரிது; திருக்கோயில் திருமணத் திட்டம் பெரிது; திருக்கோயில்கள் மருத்துவ மையங்கள் பெரிது; (மேசையைத் தட்டும் ஒலி) திருவிளக்கு பூஜை திட்டம் பெரிது; நிலம் மீட்பு, சிலை மீட்பு பெரிது; ரோவர் கருவிமூலம் நில அளவை பெரிது; (மேசையைத் தட்டும் ஒலி) திருக்குளம் திருப்பணி பெரிது; கிராமப்புற ஆதி திராவிடர் திருக்கோயில் திருப்பணி பெரிது;

நந்தவனங்கள் நலம்பெறும் திட்டங்கள் பெரிது; தெப்பக்குளம் திருவிழாக்கள் பெரிது; மகாசிவராத்திரி திருவிழாக்கள் பெரிது; அருளாளர்கள் மற்றும் சித்தர்களுக்கு விழா பெரிது; அன்னைத் தமிழில் அர்ச்சனை பெரிது; திருக்கோயில் ஓலைச்சுவடி பாதுகாப்பு பெரிது; (மேசையைத் தட்டும் ஒலி) பதிப்பகம்மூலம் 500 நூல்கள் மறுபதிப்பு பெரிது; புதிய திருமண மண்டபங்கள் கட்டுதல் பெரிது; கலைஞர் தலமரக்கன்றுகள் 1 இலட்சம் நடுவது பெரிது; (மேசையைத் தட்டும் ஒலி) கோயில் துறை செயல்பாடுகள் கணினிமயம் பெரிது; முதுநிலை திருக்கோயில்கள் கண்காணிப்பு பணி பெரிது; திங்கள் தோறும் திருக்கோயில் உழவாரப்பணி பெரிது; யானைகள், பசுக்கள் நல்வாழ்வு திட்டம் பெரிது; திருக்கோயில் பெயரில் பட்டா மீண்டும் பெறுதல் பெரிது; துறையின் ITMS புதுமைக்கு ஸ்காட்ச் விருது பெரிது;

முதல்வர் அன்னதான திட்டத்திற்கு BHOG என்ற சான்றிதழ் பெரிது; முதல்வரின் சாதனைக்கு UNESCO விருது பெரிது; திருவள்ளுவருக்கு சென்னையிலே திருக்கோயில் பெரிது; பழநி பள்ளிக் கல்லூரி மாணவர்களுக்கு மூன்று வேளை அன்னதான திட்டம் பெரிது; பக்தர்கள் தங்கும் விடுதிகள் கட்டுமானம் பெரிது; உபயதாரர் நிதி உயர்வு பெரிது; பெரிது, பெரிது, பெரிது, பெரிது என்ற இந்த ஆட்சியின் திட்டங்கள் பெரிதோ பெரிது. இவை அனைத்தையும் சாதிக்கும் எங்கள் முதல்வர் அவர்களின் ஆற்றல் பெரிதினும் பெரிது. இந்த பொற்கால ஆட்சியின் புகழ் பெரிதினும் பெரிது என்று சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### 210 அறிவிப்புகள்!

அறிவிப்புகளுக்கு வருகிறேன். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, இந்தாண்டு 210 அறிவிப்புகள். 210 அறிவிப்புகளையும் வாசிக்க தயாராக இல்லை. 26 அறிவிப்புகளை, 96 அறிவிப்புகளோடு இணைத்து வாசிப்பதற்கு நின்று கொண்டிருக்கின்றேன். பெரிது, பெரிது திட்டங்களும் பெரிது, வழங்கப்பட்டிருக்கின்ற புத்தகத்தின் அறிவிப்புகளும் பெரிது (சிரிப்பு).

**பேரவைத் தலைவர்:** எவ்வளவு பெரிதாக இருந்தாலும் 26-ல் முடித்துவிட்டீர்களே! சந்தோஷம்.

**பி.கே. சேகர்பாபு:** சட்டமன்ற அறிவிப்புகள். 2025-2026 ஆம் ஆண்டு. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சார்பில் இந்தாண்டு 2,090 திருக்கோயில்களில் ரூ.926 கோடி மதிப்பீட்டில் 2,114 திருப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட உள்ளன. திருப்பணிகள் மற்றும் இதர பணிகள் 210 அறிவிப்புகளாக வடிவமைக்கப்பட்டு நேரமின்மை காரணமாக 94 அறிவிப்புகளை 24 அறிவிப்புகளாக இணைத்து வாசிக்கிறேன். மீதமுள்ள 116 அறிவிப்புகளை இம்மன்றத்தில் வாசித்ததாக கருதி பதிவு செய்து கொள்ளுமாறு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

### அறிவிப்புகள் 2025 - 2026

#### திருமணம்

1. திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் தங்கத் தாலி உட்பட சீர் வரிசைகள் வழங்கி கடந்த மூன்று ஆண்டுகளில் 1800 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. இவ்வாண்டும் 1000 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பில் 4 கிராம் தங்கத் தாலி உட்பட ரூ.70,000/- மதிப்பில் சீர் வரிசைகள் வழங்கி திருமணம் நடத்தி வைக்கப்படும்.

#### ஒருகால பூசைத் திட்டம்

2. ஒருகால பூசைத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 18,000 திருக்கோயில்கள் பயனடைந்து வருகின்றன. இவ்வாண்டு 1000 நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.25 கோடி அரசு நிதியாக வழங்கப்படும்.

ஒரு கால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பூசை செய்யும் அர்ச்சர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் மாத ஊக்கத்தொகை ரூ.1,000/-லிருந்து ரூ.1,500/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

#### புத்தாடைகள் வழங்குதல்

3. தமிழர் திருநாளாம் தைத் திருநாளில் ஒரு கால பூசைத் திட்டத்தில் உள்ள திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு புத்தாடைகள் வழங்கப்படும்.

#### பூசை உபகரணங்கள் வழங்குதல்

4. ஒருகால பூசைத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்ள 18,000 திருக்கோயில்களுடன் இவ்வாண்டு விரிவுபடுத்தப்படும் 1000 திருக்கோயில்களை சேர்த்து மொத்தம் 19,000/- திருக்கோயில்களுக்கு பூசைகள் செய்திட உதவியாக ரூ.15 கோடி செலவில் பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, விளக்கு உள்ளிட்ட பூசை உபகரணங்கள் வழங்கப்படும்.

#### இருசக்கர வாகனம் வாங்க அரசு மானியம்

5. ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்துள்ள கிராமக்கோயில் பூசாரிகள், ஆதிதிராவிடர் திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் 10,000 நபர்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க தலா ரூ.12,000/- மானியமாக வழங்கப்படும். இதற்கான செலவினம் ரூ.12 கோடி அரசு நிதி உதவி வழங்கப்படும்.

#### திருவிழா நாட்களில் கட்டணத் தரிசனம் ரத்து

6. திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் மாத பௌர்ணமி மற்றும் கார்த்திகை தீபத்திருநாள், பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் தைப்பூசத் திருநாள், திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலில் வைகுண்ட ஏகாதசி திருநாள் ஆகிய முக்கிய திருவிழா நாட்களில் கட்டணத் தரிசனம் முற்றிலும் இரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கீழ்க்கண்ட முதுநிலைத் திருக்கோயில்களிலும் திருவிழா நாட்களில் கட்டணத் தரிசனம் முற்றிலும் ரத்து செய்யப்படும்.

i) மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் - மகாசிவராத்திரி

ii) திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் - கந்த சஷ்டி திருவிழா நாட்கள்

iii) பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் - பங்குனி உத்திரத் திருநாள்

iv) திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் - வைகுண்ட ஏகாதசி திருநாள்

v) திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் - ஆடிக்கிருத்திகை திருநாள்

vi) மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் - மீனாட்சி திருக்கல்யாணத் திருநாள்

vii) இராமேசுவரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் - ஆடி அமாவாசை திருநாள்

viii) பண்ணாரி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் - குண்டம் திருவிழா

ix) சங்கரன்கோவில், அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில் - ஆடித்தபசு திருநாள்

x) வடலூர், திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையம் - தைப்பூசத் திருநாள்

#### ஓதுவார் நியமனம்

7. இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் உள்ள ஓதுவார் காலிப் பணியிடங்களில் திருக்கோயில்கள் சார்பில் செயல்பட்டு வரும் ஓதுவார் பயிற்சி பள்ளிகளில் பயின்று சான்றிதழ் பெற்ற ஓதுவார்களுக்கும், பெண் ஓதுவார்களுக்கும் பணி நியமனத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

#### குழந்தைகளுக்கு காய்ச்சிய பால் வழங்குதல்

8. சுவாமி தரிசனம் செய்ய வருகை தரும் பக்தர்களின் பச்சிளம் குழந்தைகளுக்கு கீழ்க்கண்ட திருக்கோயில்களில் தினசரி காய்ச்சிய பால் வழங்கப்படும். இத்திட்டம்

10 திருக்கோயில்களில் ஆண்டுக்கு ரூ.50 இலட்சம் செலவினத்தில் செயல்படுத்தப்படும்.

i) திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

ii) திருவரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்

iii) சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

iv) திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில்

v) திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

vi) ஆனைமலை, அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்

vii) பண்ணாரி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

viii) திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

ix) மருதமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

x) பெரியபாளையம், அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில்

#### நாள் முழுவதும் அன்னதானத் திட்டம்

9. பக்தர்களுக்கு நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் தற்போது

**13 திருக்கோயில்களில் நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு முதல்**

(i) பிள்ளையார்பட்டி, அருள்மிகு கற்பகவிநாயகர் திருக்கோயில்

## மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணமில்லா தரிசனம்!

(ii) கொடைக்கானல், அருள்மிகு குறிஞ்சியாண்டவர் திருக்கோயில்

ஆகிய 2 திருக்கோயில்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

திருவிழா காலங்களில் நாள் முழுவதும் அன்னதானம்

10. திருவிழா மற்றும் சிறப்பு தினங்களில் கீழ்க்கண்ட 2 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்படும்.

i) சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலில் சனிக்கிழமைகள் மற்றும் விழா நாட்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்படும்.

ii) இருக்கண்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் திருவிழா மற்றும் சிறப்பு நாட்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்படும்.

#### ஒருவேளை அன்னதானத் திட்டம் விரிவுபடுத்துதல்

11. பக்தர்களுக்கு ஒருவேளை அன்னதானம் வழங்கும் திட்டம் தற்போது

764 திருக்கோயில்களில் நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு

i) அருள்மிகு குருசாமி அம்மாள் மடம் மற்றும் வள்ளலார் திருக்கோயில், கண்டமங்கலம், விழுப்புரம் மாவட்டம்.

ii) அருள்மிகு மலையாண்டி கருப்பசாமி திருக்கோயில், வலையங்குளம், மதுரை மாவட்டம்.

iii) அருள்மிகு நாடியம்மன் திருக்கோயில், கீழாத்தூர், தஞ்சாவூர் மாவட்டம்.

iv) அருள்மிகு ரெங்கநாதப்பெருமாள் திருக்கோயில், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

v) அருள்மிகு செண்பகமலை குமாரசாமி திருக்கோயில், லக்காபுரம், ஈரோடு மாவட்டம்.

vi) அருள்மிகு பூமீசுவரர் திருக்கோயில், மரக்காணம், விழுப்புரம் மாவட்டம்

ஆகிய 6 திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

#### வடை, பாயசத்துடன் அன்னதானம்

12. நாள் முழுவதும் அன்னதானம் நடைபெறும் 13 திருக்கோயில்கள் மற்றும் இவ்வாண்டு நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ள 2 திருக்கோயில்களிலும், வழக்கமாக வழங்கும் அன்னதான உணவுடன் வடை மற்றும் பாயசம் சேர்த்து வழங்கப்படும்.

#### அன்னதானத் திட்ட பயனாளிகள் எண்ணிக்கை அதிகப்படுத்துதல்

13. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், குலசேகரப்பட்டினம் அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோயிலில் தற்போது அன்னதானத் திட்டத்தின் கீழ் தினசரி

100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதை 200 பக்தர்களுக்கு விரிவுபடுத்தி வழங்கப்படும்.

14. ஈரோடு மாவட்டம், வட்டம் மற்றும் நகர், திண்டல், அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தில் தினசரி 50 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. பக்தர்கள் அதிக அளவில் வருவதை கருத்திற்கொண்டு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகள், அமாவாசை நாட்கள், மாத சஷ்டி மற்றும் கிருத்திகை நாட்களில் 200 பக்தர்களுக்கும், கந்த சஷ்டித் திருவிழா நடைபெறும் நாட்களில் நாள் ஒன்றுக்கு 500 பக்தர்களுக்கும் விரிவுபடுத்தி அன்னதானம் வழங்கப்படும்.

15. தஞ்சாவூர் மாவட்டம். கும்பகோணம் வட்டம், ஒப்பிலியப்பன் கோயில், அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயிலில் நாள்தோறும் 100 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வார சனிக்கிழமை தோறும் 200 பக்தர்களுக்கும், ஆங்கிலப் புத்தாண்டு, பங்குனி மாதம் நடைபெறும் திருத்தேரோட்டம் மற்றும் புரட்டாசி சனிக்கிழமை நாட்களில் 2000 பக்தர்களுக்கும் விரிவுபடுத்தி அன்னதானம் வழங்கப்படும்.

16. கோவை மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், சூலக்கல், அருள்மிகு மாரியம்மன் விநாயகர் திருக்கோயிலில் நாள்தோறும் 50 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதை திருவிழா மற்றும் சிறப்பு நாட்களில் 100 பக்தர்களுக்கு விரிவுபடுத்தி வழங்கப்படும்.

17. திருவள்ளூர் மாவட்டம், சிறுவாபுரி, அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் செவ்வாய்கிழமைதோறும் 500 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதை 2000 பக்தர்களுக்கும், ஞாயிறுதோறும் 100 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதை 500 பக்தர்களுக்கும் வடை, பாயாசத்துடன் விரிவுபடுத்தப்படும்.

18. தூத்துக்குடி மாவட்டம், சங்கரன்கோயில் அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயிலில் தற்போது அன்னதானத் திட்டத்தின் கீழ் நாள்தோறும் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதை 150 பக்தர்களுக்கு விரிவுபடுத்தி வழங்கப்படும்.

19. திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு அருள்மிகு வடாரேண்யேசுவரர் திருக்கோயிலில் தற்போது அன்னதானத் திட்டத்தின் கீழ் நாள்தோறும் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. பக்தர்கள் அதிகம் வருகை புரியும் ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் 500 பக்தர்களுக்கு விரிவுபடுத்தி வழங்கப்படும்.

## வடை, பாயாசத்துடன் அன்னதானம்!

20. திருச்சி மாவட்டம். திருவானைக்காவல் அருள்மிகு ஜெம்புகேசுவரர் அகிலாண்டேசுவரி திருக்கோயிலில் தற்போது அன்னதானத் திட்டத்தின் கீழ் நாள்தோறும் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதை 200 பக்தர்களுக்கு விரிவுபடுத்தி வழங்கப்படும்

21 சென்னை, வடபழநி அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தின்கீழ் நாள்தோறும் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு முதல் நாள்தோறும் 150 நபர்களுக்கும், செவ்வாய்கிழமையில்

200 நபர்களுக்கும், கிருத்திகை நாட்களில் 750 பக்தர்களுக்கும் விரிவுபடுத்தி வழங்கப்படும்.

22. வேலூர் மாவட்டம், பள்ளூர் அருள்மிகு வாராகி அம்மன் திருக்கோயிலுக்கு பஞ்சமி தினத்தன்று வருகை தரும் 200 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

23. சென்னை, வடபழநி அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில் உருவாக காரணமாக இருந்த சித்தர்கள் ஸ்ரீ அண்ணாசாமி நாயக்கர், ஸ்ரீ ரத்னசாமி செட்டியார்

#### ஸ்ரீ பாக்யலிங்க தம்பிரான் சித்தர் கோயிலில் அவர்களின் குருபூஜை தினத்தன்று

1,000 பக்தர்களுக்கும், ஒவ்வொரு பௌர்ணமி நாட்களில் 200 பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்படும்.

#### நாள் முழுவதும் பிரசாதம் வழங்குதல்

24. திருக்கோயில்களுக்கு வருகை புரியும் பக்தர்கள் அனைவருக்கும் நாள் முழுவதும் பிரசாதம் தற்போது 25 திருக்கோயில்களில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் இவ்வாண்டு மேலும் 5 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

i) அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

ii) அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில், பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

iii) அருள்மிகு ஆதிவ்யாதிஹரபக்த ஆஞ்சநேயர் திருக்கோயில், நங்கநல்லூர், சென்னை.

iv) அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயில், மாங்காடு, காஞ்சிபுரம் மாவட்டம்.

v) அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை.

#### ஆடிமாதம் அம்மன் திருக்கோயில்களில் கூழ் வார்த்தல்

25. ஆடி மாதம் வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கீழ்க்கண்ட திருக்கோயில்களில் கூழ் வார்க்கப்படும்.

i) திருச்சி மாவட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

ii) திருவேற்காடு, அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயில்

iii) கோவை மாவட்டம், ஆனைமலை அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்

iv) ஈரோடு மாவட்டம், பண்ணாரி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

v) தஞ்சாவூர் மாவட்டம், புன்னைநல்லூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

vi) திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில்

vii) திருச்சி மாவட்டம், உறையூர் அருள்மிகு வெக்காளி அம்மன் திருக்கோயில்

viii) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அருள்மிகு அங்காள பரமேசுவரி அம்மன் திருக்கோயில்

ix) திருவள்ளூர் மாவட்டம், புட்லூர் அருள்மிகு பூங்காவனத்தம்மன் என்ற அங்காள பரமேசுவரி அம்மன் திருக்கோயில்

x) தேனி மாவட்டம், வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில்.

#### சிறப்பு வழிபாடுகள் மற்றும் திருவிழாக்கள் நடத்துதல்

#### திருவிளக்கு வழிபாடு

26. மாதந்தோறும் பௌர்ணமி தினங்களில் 20 பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களில் 108 திருவிளக்கு வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு மேலும் 5 அம்மன் திருக்கோயில்களில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

i) அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை.

ii) அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில், வீரபாண்டி, தேனி மாவட்டம்.

iii) அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில், மேச்சேரி, சேலம் மாவட்டம்.

iv) அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

v) அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர், பெரம்பலூர் மாவட்டம்.

#### பெண்களுக்கு மங்கலப் பொருட்கள் வழங்குதல்

27. ஆடி மாதம் வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மங்கலப் பொருட்கள் ஒரு திருக்கோயிலுக்கு 20,000 வீதம் கீழ்க்கண்ட ஐந்து திருக்கோயில்களில் ஒரு இலட்சம் பெண் பக்தர்களுக்கு வழங்கப்படும்.

i) சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

ii) மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

iii) இருக்கண்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

iv) பெரியபாளையம் அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில்.

v) சென்னை அருள்மிகு காளிகாம்பாள் கமடேசுவரர் திருக்கோயில்.

#### மூத்த தம்பதியருக்கு திருக்கோயில்களின் சார்பில் சிறப்பு செய்தல்

28. இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் மணி விழா கண்ட 70 வயது பூர்த்தியடைந்த ஆன்மிக ஈடுபாடு உள்ள 100 தம்பதியர்கள் வீதம் 20 இணை ஆணையர் மண்டலங்களில் 2,000 தம்பதியருக்கு திருக்கோயில்கள் சார்பில் சிறப்பு செய்யப்படும்.

#### மகாசிவராத்திரி விழா

29. 9 திருக்கோயில்களின் சார்பாக மகாசிவராத்திரி விழா வெகு சிறப்பாக நடத்தப்பட்டு பக்தர்களின் அமோக வரவேற்பினை பெற்றதனைத் தொடர்ந்து, இவ்வாண்டு கூடுதலாக,

i) அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம், இராமநாதபுரம் மாவட்டம்.

ii) அருள்மிகு விருத்தகிரீசுவரர் திருக்கோயில், விருத்தாசலம் நகர், கடலூர் மாவட்டம்.

iii) அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேசுவரம், தஞ்சாவூர் மாவட்டம்.

ஆகிய 3 திருக்கோயில்கள் சார்பில் மகாசிவராத்திரி விழா நடத்தப்படும்.

#### சித்தர்கள் விழா

30. பதினென் சித்தர்களில் கமலமுனி சித்தர், பாம்பாட்டி சித்தர், சுந்தரானந்த சித்தர் ஆகிய மூவருக்கும் திருக்கோயில்களின் சார்பில் விழா எடுக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக

i) சிவவாக்கிய சித்தருக்கு புதுக்கோட்டை மாவட்டம், பெருங்களூர், அருள்மிகு உருமநாதர் திருக்கோயில் சார்பாகவும்,

ii) பதஞ்சலி சித்தருக்கு இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் சார்பாகவும், சித்தர் விழா நடத்தப்படும்.

திருக்கோயில்களுக்கு புடவை வேட்டி வழங்குதல்

31. திருக்கோயில்களில் காணிக்கையாக பெறப்படும் உபரி பருத்தி புடவை மற்றும் வேட்டிகளை ஒருகாலபூசைத் திட்ட திருக்கோயில்கள், கிராமக்கோயில்கள், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில்கள் உள்ளிட்ட திருக்கோயில்களுக்கு இறைவன், இறைவி திருவுருவங்களுக்கு சாற்றுப்படி செய்வதற்கு தேவையின் அடிப்படையில் ஆண்டுதோறும் தீபாவளி மற்றும் தைப்பொங்கல் திருநாளுக்கு முன்பாக வழங்கப்படும்.

#### தங்கக் கவசம்

32. பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயிலில் மூலவர் அம்மன் திருமேனிகளுக்கு தங்கக் கவசங்கள் ரூ.8 கோடி மதிப்பீட்டில் செய்யப்படும்.

#### புதிய வெள்ளித்தேர்

33. வேலூர் மாவட்டம், வெட்டுவானம் அருள்மிகு எல்லையம்மன் திருக்கோயிலுக்கு புதிய வெள்ளித்தேர் ரூ.1 கோடி மதிப்பீட்டில் செய்யப்படும்.

#### வெள்ளித்தேர் மராமத்து

34. கும்பகோணம், அருள்மிகு ஆதிகும்பேசுவரர் திருக்கோயிலில், பழுதடைந்துள்ள வெள்ளித்தேர் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைத்து மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

#### வெள்ளித் திருப்பணி

35. பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில், மலைக்கோயிலில் உற்சவர் சன்னதியின் உட்புற சுவர்களில் நகாசு வேலைப்பாடுகளுடன் கூடிய வெள்ளித்தகடு பதிக்கும் பணி ரூ.1.56 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

#### மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள்

மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணமின்றி இழுவை இரயில் பயணம்

36. பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் மாற்றுத்திறனாளி பக்தர்கள் மலைக்கோயிலை எளிதில் சென்றடைய கட்டணமின்றி இழுவை இரயிலில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

#### மாற்றுத் திறனாளிகளுக்கு கட்டணமின்றி கம்பிவடஊர்தி பயணம்

37. திருக்கோயில்களுக்கு வருகை தரும் மாற்றுத்திறனாளி பக்தர்கள் மலைக்கோயிலை எளிதில் சென்றடைய கட்டணமின்றி கம்பிவடஊர்தியில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

i) அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி

i) அருள்மிகு லட்சுமிநரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர்.

ii) அருள்மிகு இரத்தினகிரீசுவரர் திருக்கோயில், அய்யர்மலை, கரூர்.

மாற்றுத் திறனாளிகளுக்கு கட்டணமின்றி பேருந்து பயணம்

38. திருக்கோயில்களுக்கு வருகை தரும் மாற்றுத்திறனாளி பக்தர்கள் மலைக்கோயிலை எளிதில் சென்றடைய கட்டணமின்றி கீழ்க்கண்ட திருக்கோயில்களுக்கு சொந்தமான பேருந்தில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

i) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி

ii) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை

iii) அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில்

iv) அருள்மிகு திருமலைக்குமாரசுவாமி திருக்கோயில், பண்பொழி

v) அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருக்கோயில், திருச்செங்கோடு

vi) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சென்னிமலை

vii) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை

#### மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணமில்லா தரிசனம்

39. இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு

தொடர்ச்சி 5-ஆம் பக்கம்